www.tamilarangam.net

தமிழீழ விடுதலைப் புலிகள்
Liberation Tigers of Tamil Eelam

தமிழீழம்
8-11-95

# நிம்மதியான வாழ்வா? அவலமான சாவா?

## முடிவெடுப்பதற்கான தருணம் வந்து விட்டது

### தமிழர் படைபலத்தை அதிகரிக்க அரசியல் துறையினர் கோரிக்கை

**"தமிழர்களாகிய நாங்கள் ஒரு இறுதி முடிவை எடுக்க வேண்டிய தருணம் வந்து விட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக போராட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து இழந்து போன யாழ் மண்ணை மீட்டு நாம் நிம்மதியாக வாழ்வதா ? அல்லது தளம்பித் தளம்பி முடிவெடுத்து அவல வாழ்வு வாழ்ந்து இறுதியில் அழிவதா என்ற இரண்டில் ஒரு முடிவு எடுக்க வேண்டும். இன்றைய எமது அவல வாழ்வுக்கு காரணம் தமிழரின் படைபலப் பற்றாக்குறைதான். பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள், யுவதிகள் புலிகள் இயக்கத்தில் சேருவதன் மூலம் இழந்த வலிகாமத்தை மீட்கலாம். அத்துடன் சிங்களப்படைகளின் புதை குழியாக குடாநாட்டை மாற்றி விடலாம்" இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**


"துன்பத்தையும் துயரத்தையும் தேசாபிமான உணர்வையும் ஒருங்கே கொண்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மாபெரும் இடப்பெயர்வை வலிகாமம் பகுதியில் வசித்துள்ள மக்கள் மேற்கொண்டனர். இரு பக்கமும் நீரால் சூழப்பட்டுள்ள ஒடுக்கமான ஒரே ஒரு வீதியில் ஒரே இரவில் 5 லட்சம் மக்கள் அத்தியாவசியப் பொருள்களுடன் இடம்பெயர் பயணத்தை நடாத்திய விதம் உண்மையில் வியப்புக்குரியதாகும். இன அழிப்பை நோக்கமாகக் கொண்ட படையெடுப்பு ஒன்றில் இருந்து பாதுகாப்பு தேடும் நோக்குடன் இந்த மாபெரும் இடம் பெயர்வு நிகழ்ந்தது. ஆயினும் சனசமுத்திர அலைகளுக்குள் கர்ப்பிணிப் பெண்களும், கைக்குழந்தைகளுடன் தாய்மார்களும், வயோதிபர்களும் நோயாளிகளும் காயப்பட்ட போராளிகளும் நடந்தும் எத்தனை இடத்தில் விழுந்தும் புரண்டும் பயணம் செய்த காட்சி தேசத்தின் ஆன்மாவையே உலுக்கி உள்ளது. இருந்த பொழுதிலும் இந்த துன்பமிகுந்த இடப்பெயர்வின் மூலம் எமது மக்கள் ஒருபுறமான அரசியல் வெற்றியை எமது போராட்டத்திற்குப் பெற்று தந்துள்ளனர்.

அதாவது சிங்களப் படைகளின் ஆளுகைக்குள் தமிழ் மக்கள் வசிக்கமுடியாது என்ற யதார்த்தத்தை உலக சமூகத்திற்கு வெளிப்படுத்தியதுடன், அவ்விதம் வாழவும் நாம் விரும்பவில்லையென தேசாபிமான உணர்வையும் சிங்கள அரசுக்கு எமது மக்கள் காட்டியுள்ளனர். இனமானம் மிக்க எமது மக்களுக்கு விடுதலைப் புலிகள் தலை சாய்த்து மரியாதை செய்வதுடன் இந்த மண்ணின் மக்களை எண்ணிப் பெருமிதம் அடைகின்றது.

சிங்களப் படைகள் முன்னர் நடாத்திய சில இராணுவ நடவடிக்கைகளின் போது எமது போராளிகளின் எதிர்த்தாக்குதலை உடைத்துக் கொண்டு முன்னேறி வந்து எமது ஊர்கள் சிலவற்றை ஆக்கிரமித்திருந்த செயல்களால் எமது மக்கள் கேள்விகளை எழுப்பி இருந்தனர்.

சில ஊர்களை நோக்கி படையினர் முன்னேறுகின்றனர் என்ற நிலை வந்ததும் அச் செய்தியை அந்தந்த ஊர்களில் மக்களுக்குத் தெரியப்படுத்தி மக்கள் கொல்லப்படுதலை, கைதுசெய்யப்படுதலைத் தவிர்க்க புலிகள் உதவலாமே என்பதே அக் கேள்வியாகும். புலிகளிடம் போதிய ஆட்பலம் இல்லாத காரணத்தினால் எதிரி எங்கிருந்து எத்திசை நோக்கி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




வலிகாமம் மக்களை தமது சூழ்ச்சிப் பொறிக்குள் சிக்கவைப்பதற்காக சிறீலங்கா இராணுவம் தகர்க்கத் திட்டமிட்டிருந்த கோப்பாய்க்கும் கைதடிக்கும் இடையிலமைந்துள்ள பாலம்

நீர்ப்பரப்பு

படை நகர்வை செய்யப் போகிறான் என்று கண்காணித்து அறிவது சிரமமானது. இதனால் எதிரியின் சில இராணுவ நடவடிக்கைகளைப் பற்றி முன் எச்சரிக்கைகளை அறிவிக்க முடியாமல் போனது. ஆயினும் இந்த இராணுவ நடவடிக் கைகளைப் பற்றி முன் எச்சரிக்கைகளை மக்களுக்கு தெரிவித்து அவர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள போதுமான கால அவகாசத்தைப் பெற்று தந்துள்ளோம்.

இது ஒரு புறம் இருக்க சிங்களப் படைகள் நடாத்தும் சமர்கள் அப்பட்டமான ஒரு இன அழிப்பு என்ற பரிமாணத்துடன் நிகழ்வதால் சண்டைகள் நடைபெறும் ஊர்களில் மட்டுமன்றி அதற்கு அப்பாலும் தமிழ் மக்களை குறிவைத்து தனது நாசகார ஆயுதங்களை சிங்களப் படைகள் தாராளமாகப் பயன்படுத்தி தமிழ் மக்களை இனப் படுகொலை புரிந்தது. முன்னோக்கிப் பாய்தல், இடிமுழக்கம், சூரியக்கதிர் போன்ற அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளில் இந்த இன அழிப்பு பரிமாணத்தை துல்லியமாகக் காணலாம். சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கைகளின் மூலம் நீர் வேலியைத் தாண்டி வந்த படையினர் கோப்பாய் சந்தியைக் கைப்பற்றிவிட பல தடவை முயற்சி செய்தனர். அதற்கு ஒரு இராணுவ நோக்கம் இருந் தது. அந்த நோக்கம் வலிகாமத்தில் வாழும் மக்க ளுக்குப் பேராபத்தை உள்ளாக்கக் கூடியது. கோப்பாய் சந்தியைக் கைப்பற்றி, பின்னர் அங்கி ருந்து கைதடி நோக்கிச் செல்லும் பாதையில் முன் னேறி கோப்பாய் வடக்கை சென்றடைந்த பின் அங்கிருந்தபடி சில கிலோமீற்றர் தொலைவு கொண்ட வெட்ட வெளியூடாகப் பார்த்தால் வலிகாமத்தை தென்மராட்சியுடன் இணைக்கும் நாவற்குழி பாலம் தெரியும். கோப்பாய் வடக்கில் நிலைகொண்டபடி நாவற்குழிப் பாலத்தை டாங் கிகள் மூலம் தகர்த்து எறிந்து விடுவதுதான் கோப் பாய் நோக்கி நகர்ந்ததின் இராணுவ இலக்காகும். இதே சமயம் பூநகரிப் படைத்தளத்தில் இருந்து படகுகள் மூலம் கடலினைக் கடந்து கிழக்கு அரியாலைப் பகுதியினுள் புகுந்து நாவற்குழிப் புகையிரதப் பாலத்தை கைப்பற்றி அங்கிருந்து செம் மணி வெளியூடாக கோப்பாய் வடக்கு வரைக்கும் ஒரு நகர்வை ஏற்படுத்தி வலிகாமத்திற்கும் விலங்கு போட அரச படைகள் திட்டம் தீட்டின. இந் நாச கார நடவடிக்கைகளை சிங்களப் படைகள் நிறை வேற்றியிருக்குமானால், வலிகாமம் வாழ் மக்கள் ஒரு பெரும் இனக்கொலையெனும் அபாயத்தை எதிர்நோக்கியிருப்பர். வலிகாமத்தில் வசித்த 5 லட்சத்திற்கு மேற்பட்ட மக்களையும் பொறிக்குள் சிக்கவைக்கும் இந்த நகர்வு யுக்தியை படையினர் வேகமாக மேற்கொள்ள இருப்பதான உறுதியான தகவல் எமக்கு இறுதி நேரத்திலேயே கிடைத்தது. பெருமளவு ஆயுதபலத்துடன் சிங்களப் படையினர் நடாத்த இருந்த இந்த இருமுனை நகர்வைத் தடுக்கவல்ல ஆட்தொகை எமது இயக்கத்தில் இருக்காததால் நாமும் ஒரு திடீர் முடிவை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டோம். இந்த நிலையிலேயே

www.tamilarangam.net

வலிகாமம் மக்களைப் பாதுகாப்பான இடம் நோக்கி உடனடியாக நகரும்படி ஆலோசனை கூறினோம். இந்த திடீர் அறிவிப்பால் ஒரு அவசர இடம் பெயர்வை முன் கூட்டிய தயாரிப்புக்கள் எதுவும் இன்றி செய்து முடிக்க வேண்டிய கட்டாய நிலை மக்களுக்கு எழுந்து விட்டது. இதனால் இந்த மாபெரும் இடம்பெயர்வின் போது எமது மக்கள் பல கஸ்டங்களையும் துன்பங்களையும் எதிர்கொள்ள வேண்டி வந்துவிட்டது. நோயாளிகளும், கர்ப்பிணி களும், வயோதிபர்களும் கூட இந்த அவசர இடப்பெயர்வில் பங்கு கொண்டு இருந்தனர். சண்டைகளில் படுகாயமடைந்து யாழ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பல நூற்றுக்கணக்கான போராளிகள் உடல் உபாதைகளுடனும் பெரும் சிரமத்துடனும் மக்களுடன் இந்த திடீர் இடப்பெயர்வில் பங்கு கொள்ள வேண்டி வந்துவிட்டது. சிங்கள படைகளின் கைகளுக்குள் அகப்பட்டு ஒரு இனப்படுகொலைக்கு உள்ளாகி அழிந்து போவதை விட இந்த திடீர் இடப்பெயர்வால் நாங்கள் அனுபவித்த துன்ப துயரங்களை சகித்துக்கொள்ளலாம். மேலும் வலிகாமத்தின் ஏனைய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்களால் வலிகாமத்தின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகள் முன்னரே நிரம்பி வழிந்திருந்தன. இந்த மக்கள் சமுத்திரத்தையும் கருத்தில் எடுக்காது சிங்கள படைகள் விமானத் தாக்குதல்களையும், ஆட்டிலறி, எறிகணைத் தாக்குதல்களையும் கண்மூடித்தனமாக நடாத்திவந்துள்ளனர். இந்த நிலையில் வலிகாமத்தில் பெருந் தொகையான மக்களையும் வைத்துக்கொண்டு சிங்களப்படைகளுடன் போரிடுவது ஓர் ஆபத்தான விடயம். அவ்விதம் செய்வது தமிழ் மக்களை ஒரு இன அழிப்பு செய்வதற்கு எதிரி படைக்கு நாமே சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்ததாகி விடும். எனவே தான் மக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டும் அத்துடன் நாம் நடத்தி வரும் யுத்தத்தாக்குதலின் போது மக்களுக்கு இழப்புக்கள் ஏற்படாது இருக்கும் முகமாகவும் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லும்படி கோர வேண்டிய தவிர்க்க முடியாத தேவையொன்று எழுந்தது. இத்தகையதொரு நெருக்கடி நிலையில் இவ்வாறானதொரு முடிவை எடுத்து எமது மக்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை புலிகள் இயக்கத்திற்கு இருந்தது. இந்த வரலாற்றுக் கடமையை பொறுப்புணர்ச்சியுடன் நாங்கள் செய்து முடித்துள்ளோம். ஆனால் வலிகாமத்தை விட்டு மக்கள் அகன்று விட்டதை அறிந்து ஏமாற்றமடைந்த எதிரிப்படைகள் யாழ் நோக்கி முன்னேறும் வேகத்தை சற்றுத் தணித்து விட்டனர். இப்போது மக்களுக்கு வலை விரிக்கும் மாற்றுத் திட்டமொன்றைப் பற்றி சிங்கள அரசு சிந்தித்துக்கொண்டு இருக்கின்றது. மீண்டும் வலிகாமத்திற்குள் மக்களை நுழைய விட்டு அவர்கள் மீது திடீரெனப் பாய்வதா, அல்லது தென்மராட்சி நோக்கிப் படையினரை திருப்பி விட்டு பெரிய தொகை மக்களைப் பலியெடுப்பதா என்று சிங்களப் படைகள் சிந்தித்து கொண்டிருக்கின்றனர். இதேவேளை எதிரியின் கைகளுக்குள் அகப்பட்டால் அவற்றைப் பயன்படுத்தி பாரிய அழிவுகளை எமது மக்களுக்கு உண்டு பண்ணக்கூடிய சக்தி வாய்ந்த எமது இராணுவ உபகரணங்களையும் முக்கிய ஆவணங்களையும் முன்னெச்சரிக்கையுடன் சில நாட்களுக்கு முன்னரேயே இயக்கம் இடம் மாற்றி இருந்தது என்பது குறிப்பிடத் தக்கது. தமிழ் மக்களாகிய நாங்கள் ஒரு இறுதி முடிவை எடுக்க வேண்டிய தருணம் இப்போது வந்து விட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக போராட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து இழந்து போன யாழ். மண்ணை மீட்டு நாம் நிம்மதியாக வாழ்வதா அல்லது தளம்பித் தளம்பி முடிவெடுத்து அவல வாழ்வை வாழ்ந்து இறுதியில் அழிவதா என்று இரண்டில் ஒரு முடிவு எடுக்க வேண்டும்.

இன்று சர்வதேச சமூகத்தினதும் அதிலும் குறிப்பாக உலகத் தமிழின மக்களினதும் அக்கறை தமிழீழ மக்கள் பக்கம் திரும்பியுள்ளது. யாழ்ப்பாண மக்களின் வேதனையான வாழ்வும் அவர்களின் உறுதியான தேசாபிமானமும் உலகத்தமிழர்களுக்கு இன உணர்வை ஊட்டிக்கொண்டு இருக்கின்றது. தமிழ் நாடு உட்பட தமிழர்கள் வாழும் நாடுகளில் இருந்து தமிழீழப் போராட்டத்திற்கான ஆதரவுக் குரல்கள் முன்னெப்பொழுதையும் விட இப்பொழுது ஓங்கி ஒலிக்க ஆரம்பித்துள்ளன. இந்த உலகச் சூழலை எமது மக்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டும் "இன்றைய எமது அவல வாழ்வுக்குக் காரணம் தமிழரின் படைபல பற்றாக்குறைதான். பல்லாயிரக்கணக்கில் எமது இளைஞர்கள், யுவதிகள் புலிகள் இயக்கத்தில் சேர்வதன் மூலம் இழந்த வலிகாமத்தை மீட்கலாம். அத்துடன் சிங்களப்படைகளின் புதைகுழியாக குடாநாட்டை மாற்றி விடலாம்.

ஆகவே இடம்பெயர்ந்து வாழும் இளைஞர்கள், யுவதிகள் உட்பட இளம் சமூகம் குடாநாட்டின் இந்த நிலை குறித்து இன்றே இயக்கத்தில் இணைய முன்வாருங்கள். வலிகாமத்திற்குள் ஊடுருவிய இராணுவத்தைத் தோற்கடிக்காது விட்டால் அந்த ஊடுருவல் வடமராட்சி தென்மராட்சி வரை நீளும் அபாயமும் இருக்கின்றது.

இந்த அழிவிலிருந்து எமது மண்ணையும் மக்களையும் பாதுகாப்பதாயின் விடுதலைப் புலிகள் படையை வலுப்படுத்த வேண்டும். புலிகள் இயக்கம் பலம் பெறுவது என்பது மக்களின் பாதுகாப்பு பலப்படுத்துகின்றது என்பதையே குறிக்கும். எனவே புலிகளின் படைப்பலத்தைப் பெருக்க பல்லாயிரக் கணக்கில் இளைஞர்களும் இளம் பெண்களும் புலிகளுடன் சேர வேண்டும். எவ்வளவுக்கு எவ்வளவு எமது படை பலம் பெருகுகின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு எமது தரப்பில் சாவும் அழிவும் குறையும்.

இன்று எமது மக்கள் எதிர் நோக்கி நிற்கும் பேரழிவைத் தடுக்கும் சக்தியும் எமது மக்களிடமே இருக்கின்றது. இதற்கு ஒரே வழி இன்றைய இளைஞர்கள் புலிகளுடன் இணைந்து எமது மக்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபடுவதுதான். இதுவே அனைத்து இளைஞர்களின் வரலாற்றுக் கடமையாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





சிறீலங்கா இராணுவத்தின் 'இடிமுழக்க தாக்குத'லின் போது தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறி கோயில்கள், பாடசாலைகள் மற்றும் தெருவோரங்களில் தஞ்சம் புகுந்திருக்கும் வலிகாமம் பகுதி மக்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்